# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா

முனைவர் ம. பிரகாஷ்

தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி.

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா
முனைவர் ம. பிரகாஷ்



**தமிழ்த்துறை**

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக்
குழுவின் 'ஏ' தகுதி ஐ.எஸ்.ஓ.
9001:2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி - 642 001

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்புக்குழு
முனைவர் த.பரமேசுவரி(துறைத்தலைவர்),
முனைவர் த. கீதாஞ்சலி,
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா,
முனைவர் ம. சித்திரகலா, முனைவர் ந. பிரகாஷ்,
முனைவர் மு. சுகந்தி, முனைவர் இரா. ஜெயந்தி,
பேரா. ர.சூர்யா, பேரா. அ. மகபூபு.

முதற்பதிப்பு : டிசம்பர், 2018

வெளியீடு : டுடே பதிப்பகம்
192, பெல்ஸ் சாலை,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

கணினி : டுடே கிராபிக்ஸ்

அச்சாக்கம் : டுடே பிரிண்டர்ஸ்
14/192, பெல்ஸ் ரோடு,
எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ், சென்னை-05.
அலைபேசி:98400 83738 / 044-2855 3797

பக்கங்கள் : xxiii + 483 = 506

விலை : ரூ.420/-

ISBN : 978-93-87882-47-8

# பொருளடக்கம்

1. தமிழ் இலக்கியங்களில் இறை இயல் காட்டும் படிநிலை வளர்ச்சிகள்
முனைவர் அமுதன் 1

2. திருமுறைகளில் திருக்குறள்
N.S. அசோக்குமார் 7

3. சிலப்பதிகாரம் காட்டும் அரசியல் அறம்
பா. அந்தோனியம்மாள் 15

4. பரிபாடலில் திருமால் வழிபாடு
முனைவர் ப. அருள்ஜோதி 19

5. தமிழ் இலக்கியத்தில் இறைநெறி
அனிதா 26

6. இசுலாமியத் தமிழிலக்கியம் காட்டும் இறைநெறிகள்
முனைவர் இரா. ஆரோக்கியமேரி 32

7. தமிழ்ச் சித்தர் இறைநெறி
முனைவர் வெ. இராம்ராஜ் 38

8. திருக்குறளில் இறைமை நெறி
பேரா. முனைவர் இலலிதாசுந்தரம் 46

9. திருமுருகாற்றுப்படையும் தெய்வம் போற்றும் மரபும்
முனைவர் வே. கண்ணதாசன் 53

10. சர்வமும் இறைமயம்
பேரா. பா. கலைச்செல்வி 61

11. நிலம் சார்ந்த இறைநெறி
ம. காயத்ரி 64

12. ஔவையின் பார்வையில் இறைவன்
முனைவர் உ. கிருஷ்ணன் 70

13. சைவசமயமும் இறைநெறியும்
முனைவர் த. கீதாஞ்சலி 77

14. சங்க இலக்கியத்தில் திருமால் வழிபாடு
முனைவர் ச. குருஞானாம்பிகா 83

15. ஆதிரையான் – ஆடவல்லான் வழிபாட்டு வளர்ச்சி நிலை
ர.கோவர்தனன் 88

16. திருவள்ளுவர் வரையறுத்த இறைநெறிக் கோட்பாடு 97
திருக்குறள் தூதர் ம. சக்கரவர்த்தி

17. கண்ணதாசன் கவிதைகளில் இறைநெறிகள் 106
இரா. சங்கரேஸ்வரி

18. நால்வரின் பக்தி நெறிகள் 112
ப. சவிதா

19. அவ்வை குறட்பாக்களில் சைவ சித்தாந்த நெறி 119
முனைவர் சே. சாந்தி

20. இலக்கியங்களில் இறைநெறியின் நோக்கும் போக்கும் 125
முனைவர் ம. சித்ரகலா

21. நாட்டுப்புறத் தெய்வங்களும் திருவிழாக்களும் 135
A. சிவபாக்யம்

22. பகுத்தறிவு – வழிபாட்டு நெறி 142
முனைவர் மு. சுகந்தி

23. அனுராதாரமணன் நாவல்களில் இறைநெறிகள் 148
கி. சுந்தரம்

24. பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்களுள் இறைமைப் பெண்கள் 153
பேரா. ர. சூர்யா

25. மனித மனமும் இறையும் 158
முனைவர் ந. ஜெயசுதா

26. குலசேகர ஆழ்வாரின் பக்திநெறி 162
முனைவர் இரா. ஜெயந்தி

27. சங்க இலக்கியத்தில் செவ்வேள் 168
முனைவர் ஜமுனாசெல்வராஜ்

28. தொல்காப்பியத்தில் இறைநெறி 173
மு. செல்வகுமார்

29. செவ்விலக்கியத்தில் மாயோன் வழிபாடு 182
முனைவர் ம. தமிழ்வாணன்

30. ஆழ்வார் பாசுரங்களில் – அகநெறி 193
ந. திருமால்

31. நீலகிரி தொரையரின் கோவில் அமைப்பு முறை 196
ம. தீபா

32. இறைநெறியில் முருக தத்துவம் 202
முனைவர் கி. துர்காதேவி

33. திருமுருகாற்றுப்படையில் இறைநெறி
முனைவர் யு. துர்காதேவி 209
34. இருக்க இயலாத இறைநெறிகள்
Dr. K.I.N. DEIVA AKANDAN ARAMAN 215
35. அறநெறியின் இறைநெறிகள்
திருக்குறள் தூதர் சு. நடராசன் 222
36. திருக்குறள் உணர்த்தும் இறையியல் கோட்பாடு
முனைவர் நயம்பு.அறிவுடைநம்பி 227
37. குறிஞ்சி நிலத் தெய்வம்
த. நர்மதா தேவி 235
38. நாகூர் ரூமியின் சிறுகதைகளின் வழி காணப்படும் இசுலாமியக் கருத்துகள்
கா. நஸ்ரீன் பாத்திமா 240
39. தமிழ் இலக்கியத்தில் முருகவழிபாடு
அ. நித்யா 245
40. இராமனின் இறைநெறிக்கொள்கை
முனைவர் வெ. நிர்மலா 250
41. சமணம் சுட்டும் இறைநெறி
முனைவர் ஜெ. நீலாக்சி 258
42. பாரதியாரின் இறைநெறி
முனைவர் ஏ. பச்சையப்பன் 262
43. திருப்பாவையில் இறைநெறி
வீ. பவானி 271
44. இறைநெறியில் புதுக்கவிதை – ஓர் ஆய்வு
முனைவர் கோ.வ. பரத்வாஜ் 278
45. திருமுருகாற்றுப்படை – சுவையும் சொல்லாக்கமும்
முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன் 283
46. வைணவ இலக்கியத்தில் ஆண்டாளின் இறைநெறி
முனைவர் ச. பாக்கியலஷ்மி 299
47. திருமூலர் கூறும் துறவு மார்க்கம்
முனைவர் ஜீ. பாண்டியலட்சுமி 305
48. பரிபாடலில் திருமால் செவ்வேள் வழிபாடு – ஓர் ஒப்பீடு
இரா. பிரகாஷ் 312

49. தமிழ்ச் சமூக வரலாறு: முருகனின் பரிமாணங்கள் 320
முனைவர் ம. பிரகாஷ்

50. பட்டினத்தார் பாடல்களில் இறையுணர்வு 326
ப. பிரதாப்

51. திருக்காளத்திப்புராணம் காட்டும் கண்ணப்பரின் இறைநெறி 333
ப. பிரியா

52. பெரியபுராணமும் : விவிலியம் காட்டும் இறைநெறிகள் 338
பா. பூங்காவனம்

53. விவிலியம் காட்டும் இறைநெறி 343
சு. பெர்சியா ஜீவபாய்

54. டி. செல்வராஜ் நாவல்களில் இறைநெறி 348
முனைவர் பி. மஞ்சுளா

55. சமயங்கள் வளர்த்த தமிழ் 353
அ. மகபூபூ

56. தமிழ் இலக்கியங்களில் இறைநெறி 364
முனைவர் ச. மதுரா

57. சங்ககால நாடறி நன்மணமும் தாலியும் 369
முனைவர் த. மலையரசி

58. திருமுருகாற்றுப்படையும் இறைநெறியும் 374
முனைவர் மு.தேவராஜ்

59. திரு.வி.க.வின் பொதுமை நோக்கிய சைவம் 383
பேராசிரியர் ப. மகாலிங்கம்

60. இலக்கியத்தில் ஆழ்வார்களின் இறைநெறி 389
முனைவர் பே. மகேஸ்வரி

61. இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா உணர்த்தும் இறைநெறி 395
பேராசிரியர் முனைவர் வே. மாணிக்கம்மாள்

62. திருவள்ளுவரின் கடவுள் கொள்கை 402
முனைவர் முகில்லை இராசபாண்டியன்

63. சிலப்பதிகாரம் கூறும் இறைவழிபாட்டு மரபுகள் 407
அ. முத்துகிருஷ்ணன்

64. கம்பனில் வைணவ நெறி 411
முனைவர் சி. முத்துமாலை

65. தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள் 419
க. முருகேசன்

66. திருவள்ளுவர் வரையறுத்த மனிதத் தெய்வக் கோட்பாடுகள்
முனைவர் கு. மோகனராசு 425

67. நாட்டுப்புற பாடல்களில் இறைவழிபாடு
முனைவர் ராதிகா மேகநாதன் 431

68. புரட்சித்துறவி வள்ளலாரின் இறைநெறி
முனைவர் த. ராஜீவ்காந்தி 437

69. இலக்கியங்களில் நடுகல் வழிபாட்டுமுறைகளும், தற்கால வழிபாட்டுமுறைகளும்
முனைவர் வே. வளர்மதி 442

70. சங்க இலக்கியத்தில் திருமால்
வி. வாசுதேவன் 448

71. பன்னிரு ஆழ்வார்களின் பக்திநெறி
து. விசாலாட்சி 456

72. சங்க இலக்கியங்களில் சிவ வழிபாடு
ரா. ராஜா 466

73. FACTS OF INCOME INEQUALITY IN INDIA
SHAHUL HAMEED, NGOZI ADELEYE, M. ABDUL JAMAL 473

# 4. பரிபாடலில் திருமால் வழிபாடு

முனைவர் ப.அருள்ஜோதி
தமிழ் உதவிப்பேராசிரியர்,
என்.ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

சங்க கால மக்களின் வாழ்வியலையும், கலாச்சாரத்தையும் பறைசாற்றும் இலக்கியமாக சங்கஇலக்கியம் விளங்குகிறது. அவ்வகையில் வழிபாடு சார்ந்த பல்வேறு தகவல்களையும் தன்னகத்தே கொண்ட ஒரு பெட்டகமாகவும் திகழ்கிறது. வழிபாடு என்பது மக்களை நல்வழிபடுத்தவும், அவர்களின் பண்புகளைச் செம்மைப் படுத்தவும் ஏற்படுத்தப்பட்டது எனலாம். வழிபாடு என்னும் சொல்லில் வழி என்பது பாதை,நெறி என்ற பொருளிலும், பாடு என்பது உடன்படல் என்ற பொருளிலும் பொருள் கொள்ளலாம்.

## திருமாலின் காட்சி

இறைவன் கோயில்களில் குடிகொண்டுள்ள காட்சியினைச் சங்கப்பாடல்கள் காட்டி நிற்கின்றன. அவ்வகையில் திருமாலின் கோலத்தை,

**மன் புனல் இளவெயில் வளாவ இருள் வளர்வென,**
**பொன் புனை உடுக்கையோன் புணர்ந்த அமர் நிலையே**
**நினைமின், மாந்தீர் கேண்மின், கமழ் சீர் (பரி.15-2729)**

என்ற வரிகள் சுட்டுகின்றன. குளிர்ச்சியைக் கொண்ட இளவெயில் சூழவும் அதனிடையே இருள் வளர்தலைப் போன்று கரிய திருமால் பொன்னாடை அணிந்து, தமக்கு மூத்தவனாகிய பலராமனோடு சேர்ந்து அமர்ந்து நிற்கும் நிலையினை மாந்தர்கள் அனைவரும் நினைந்து போற்றுவீராக! என்ற கூற்றிலிருந்து திருமாலிருங்குன்றில் திருமால் பலராமனோடு இருந்ததனை அறிய முடிகிறது.

**ஆயிரம் விரித்த அணங்குடை அருந் தலை**
**தீ உமிழ் திறலொடு முடிமிசை அணவர**

மாவுடை மலர் மார்பின் மைஇல் வால் வளை மேனி
சேய் உயர் பணைமிசை எழில் வேழம் ஏந்திய
வாய் வாங்கும் வளை நாஞ்சில் ஒரு குழை ஒருவனை
எரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலர் புரையும் மேனியை மேனித்
திரு ஞெமிர்ந்து அமர்ந்த மார்பினை (பரி 1-1-8)

திருமால் கண்டவர்க்கு அச்சம் தரும் இயல்புடையதும் சினத்தீயைக் காக்கும் இயல்புடையதுமாய் ஆயிரமாக விரிந்த தலையினைக் கொண்ட ஆதிசேடனாகிய பாம்பணையில் பள்ளி கொண்டுள்ளாய். அந்நிலையில் ஆயிரமாக விரிந்த அதன் தலை உயர்ந்த விரிந்து உனது திருமுடிக்கு மேல் படமாக நிழல் செய்து விளங்குகின்றது. அங்கு திருமகள் உறையும் அகன்ற மார்பினையுடையவனாகத் திகழ்கின்றாய். வெண்சங்கு, கலப்பைப் படை போன்றவற்றையுடையவன்.

**கள் அணி பசுந் துளவினவை, கருங் குன்றனையவை**
**ஒள் ஒளியவை ஒரு குழையவை**
**புள் அணி பொலங் கொடியவை**
**வள் அணி வளை நாஞ்சிலவை**
**சலம் புரி தண்டு ஏந்தினவை**
**வலம் புரி வய நேமியவை**
**வரி சிலை வய அம்பினவை**
**புகர் இணர் சூழ் வட்டத்தவை: புகர் வாளவை (பரி.15 -54-63)**

தேன் அணிந்த பசுந்துழாய் மாலையினை உடையவன், கரிய மலை போன்று விளங்குபவன். மிக்க ஒளியினை உடையவன். ஒற்றைக் குழையினை உடையவன். கருடப்பறவை எழுதிய அழகிய பொற்கொடியினை உடையவன். கூர்மைமிக்க வளைந்த கலப்படையினைப் படையாக உடையவன். சினமிக்க தண்டப் படையினை ஏந்தியவன். வலம்புரிசங்கோடு வெற்றி மிக்க சக்கரப்படையினை கொண்டவன். கட்டப் பெற்ற வில்லோடு வெற்றி தரும் அம்புகள் உடையவன். புள்ளிகள் ஒருங்கு சூழ்ந்த பாராவளையினைக் கொண்டவன் என்ற கருத்திலிருந்து திருமால் கொண்டுள்ள உடைமைகள் புலப்படுகின்றன.

## திருமாலை வழிபடுவோர் அடையும் பயன்கள்

இறைவழிபாடு மக்களிடம் கொண்டு செல்ல முற்பட்ட நம் முன்னோர்கள், சான்றோர் பெருமக்கள் வழிபாட்டின் வழி நாம்

அடையும் பயன்களையும் எடுத்துரைத்துள்ளனர். அவ்வகையில் திருமாலை வழிபடுவோர் அடையும் பயன்களை,

தையலவரொடும், தந்தாரவரொடும்,
கைம் மகவோடும், காதலவரொடும்,
தெய்வம் பேணித் திசை தொழுதனிர் செல்மின் -
புவ்வத் தாமரை புரையும் கண்ணன்,
வெளவல் கார் இருள் மயங்கு மணி மேனியன்,
எவ்வயின் உலகத்தும் தோன்றி அவ்வயின்
என்பது மறுக்கத் துன்பம் களைவோன்
அன்பு அது மே எய் இருங்கு ன்றத்தான் (பரி 1-46-53)

திருமாலிருங்குன்றத்தை நும் மனைவியரோடும் பெற்றோரோடும் குழந்தைகளோடும் அன்புடைய சுற்றத்தாரோடும் கூடித் தெய்வமாக மதித்து அக்குன்று நிற்கும் திசைநோக்கித் தொழுது செல்லவேண்டும் தனது திரு உந்தித் தாமரை போலவே விளங்கும் கண்ணை உடையவன். நீரைக் கவர்கின்ற மேகத்தையும் இருளையும், நீலமணியையும் போலும் உடம்பினன். எல்லா உலகினும் வெளிப்படத் தோன்றி அங்குள்ள உயிர்த்தொகுதிகளுக்குத் துன்பம் தரும் பிறவி நோயைக் களைபவன். அத்தகைய திருமால் அன்பு பொருந்தித் திருமாலிருஞ்சோலை மலையின்கண்ணே உள்ளான் என்பதிலிருந்து திருமால் வீற்றிருக்கும் அழகும், அவரை வழிபடுவோர் அடையும் பயன்களையும் அறிய முடிகிறது.

திருமால் முதல், இடை, கடை என்னும் மூன்று நிலைகளில் செய்யும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்தற்காக பிறவாத பிறப்பு இல்லை. அங்ஙனம் பிறந்தாலும் அவரைப் பிறக்கச் செய்தோரும் இல்லை என்பதை,

முதல்முறை, இடைமுறை,கடைமுறை, தொழிலில்
பிறவாப் பிறப்பு இலை பிறப்பித்தோர் இலையே
(பரி-2 -71-72)

என்ற வரிகள் விளக்கக் காணலாம்.

பொருவேம் என்றவர் மதம் தபக் கடந்து
செரு மேம்பட்ட செயிர் தீர் அண்ணல்
இருவர் தாதை இலங்கு பூண் மாஅல்
தெருள நின் வரவு அறிதல்
மருள் அறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே (பரி1-29-33)

அறியாமையால் எதிர்த்த அவுணர்களின் வலிமை அழியும்படி செய்து வென்று போரில் மேன்மை அடைந்த குற்றமற்ற அண்ணலே காமன் சாமன் என்னும் இருவருக்கும் தந்தையே ஒளி திகழும் அணிகலன்கள் அணிந்த திருமாலே உனது வரலாற்றினைத் தெளிவாக அறிந்த கொள்ளுதல் என்பது மயக்கம் அறத் தெளிந்த ஞானம் எய்திய முனிவர்கட்கும் அரியதாகும் என்பதிலிருந்து திருமாலின் வரலாற்றினை தெளிவாக அறிதல் என்பது அரிய செயல் என்பது பெறப்படுகிறது.

நாறு இணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ, வீறு பெறு துறக்கம்?
அரிதின் பெறு துறக்கம் மாலிருங்குன்றம்
எளிதின் பெறல் உரிமை ஏத்துகம், சிலம்ப (பரி15-1518)

மற்ற உலகங்களிலிருந்து வேறுபட்டு உயர்ந்த துறக்க உலகமாகிய மேலுலகத்திற்கு மணம் கமழும் பூங்கொத்துக்களைக் கொண்ட துளசி மாலை அணிந்த திருமால் அருள் செய்யாத நிலையில் ஏறிச் செல்லுதல் இயலாததாகும். மேலுலகிற்குத் தம் முயற்சியால் உயிர்கள் போவது அரிதாகும். அவ்வாறு பெறுவதற்கரிதாக இருக்கும் துறக்க உலகை எளிதாகப் பெறுவதற்கு உரிமை வழங்கும் சிறப்பினைக் கொண்டது திருமாலிருங்குன்றம். அக்குன்றத்தைப் பேரொலி செய்து நாம் தொழுவோமாக என்பதிலிருந்து திருமால் மக்கள் துறக்கம் எய்துவதற்கு அருள் செய்பவர் என்பது புலனாகிறது.

## திருமாலின் வடிவங்கள்

திருமால் எத்தகைய வடிவங்களில் இருந்தார் என்பதையும், அந்த வடிவங்கள் எத்தகைய கருத்தினை முன்வைக்கின்றன என்பதையும்,

விறல்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்
அறனும், ஆர்வலர்க்கு அருளும், நீ
திறன் இலோர்த் திருத்திய தீது தீர் கொள்கை
மறனும், மாற்றலர்க்கு அணங்கும், நீ
அம் கண் வானத்து அணி நிலாத் திகழ்தரும்
திங்களும், தெறு கதிர்க் கனலியும் நீ (பரி -1 40-46)

என்ற வரிகள் விளக்குகின்றன. வெற்றி மிக்க பெருமை சான்ற புகழினையுடைய அந்தணர்களால் காக்கப்படும் அறமும், உன்பால் அன்புடையவர்களுக்கு நீ அருளிச் செய்யும் அருளுமாக நீயே உள்ளாய். நல்வழியில் செல்லுமாறு திருத்திய குற்றமற்ற சிறப்புடைய மறமும், திருத்தும் அந்நிலையில் உனக்குப் பகைவராக மாறியவர்களை வருத்தும் துன்பமுமாக நீயே உள்ளாய். அழகியதாய் இடமகன்று விளங்கும் வானத்தில் அழகிய ஒளியோடு திகழும் திங்களும் வெதுப்பும் கிரணங்கள் கொண்ட கதிரவனும் நீ என்ற கருத்திலிருந்து இறைவன் அன்பு, அருள், மறம் போன்ற பல வடிவங்களில் இருப்பதாகக் கருதப்பட்டதை அறிய முடிகிறது.

## திருமாலின் அவதாரம்

திருமால் ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு அவதாரம் எடுத்ததாக இலக்கியங்கள்முதல் புராணங்கள் வரை சான்று பகர்கின்றன. அவ்வகையில் திருமால் எடுத்த பன்றி அவதாரத்தினை,

**நெய்தலும், குவளையும், ஆம்பலும், சங்கமும்,**
**மைஇல் கமலமும், வெள்ளமும், நுதலிய**
**செய் குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை**
**கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய**
**ஊழி ஒருவினை உணர்த்தலின் முதுமைக்கு**
**ஊழி யாவரும் உணரா**
**ஆழி முதல்வ நிற் பேணுதும் தொழுது (பரி 1-13-19)**

என்ற வரிகள் விளக்குகின்றன. நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் முதலான எண்களால் குறிக்கப்படுகின்ற கால எல்லையைக் கடந்த பின்னர் உயிர்கள் தோன்றி வாழும் பொருட்டு நீரினுள் மூழ்கிக்கிடந்த நிலவுலகத்தை நீ பன்றியாகி மேலே கொணர்ந்தமையால் இவ்வூழிக்காலம் வராக கற்பம் என்னும் பெயரையுடையதாய் விளங்குகிறது. இக்கருத்துக்களிலிருந்து திருமாலின் பன்றி அவதாரத்தின் சிறப்பு புலப்படுகிறது.

**செயிர்தீர் செங்கட் செல்வ நிற்புகழ**
**புகைந்த நெஞ்சின் புலர்ந்த சாந்தின்**
**பிருங்கலாதன் பலபல பிணி பட**
**வலந்துழி மலர்ந்த நோய் கூர் கூம்பிய நடுக்கத்து**

அலர்ந்த புகழோன் தாதை ஆகலின்
இகழ்வோன் இகழா நெஞ்சினனாக நீ இகழா
நன்றா நட்ட அவன் நன்மார்பு முயங்கி(பரி 3- 10-16)

இயல்பிலேயே குற்றமற்ற சிவந்த கண்களையுடையவனே உன்பால் பேரன்பு பூண்ட அன்பனாகிய பிரகலாதன் உன்னைப் புகழ்ந்து பேசினான். அதைக்கேட்டுப் பொறுத்துக் கொள்ள முடியாத சினத்தீயினால் புகைந்த நெஞ்சினையும் உலர்ந்த சந்தனத்தினையணிந்த மார்பினையும் உடைய இரணியன் தன்மகன் என்றும் பாராது பிரகலாதனுக்குப் பல்வேறு கொடுமைகள் தந்து துன்புறுத்தினான். அவற்றால் மிகுதியான துன்பமுற்ற காரணத்தால் நடுக்கமுடைய விரிந்த புகழையுடைய பிரகலாதன் தன்னை இகழ்ந்து துன்புறுத்துபவன் தன் தந்தையே ஆதலின் தான் அவனைக் கொல்லமல் பொறுமை காக்கின்றான். ஆனால் அவனின் துன்பங்கள் அதிகமாகி பிரகலாதனைக் கொல்ல துணியும் போது இறைவன் நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியனை அழித்தான் என்பதைக் காண முடிகிறது.

## திருமால்அழகின் பண்புகள்

திருமாலின் அழகினைப் பல்வேறு பண்புகளுடன் ஒப்பிட்டுள்ளதை,

நின்னது திகழ் ஒளி சிறப்பு இருள் திருமணி
கண்ணே புகழ்சால் தாமரை அலர் இணைப்பிணையல்
வாய்மை வயங்கிய வைகல் சிறந்த
நோன்மை நாடின் இருநிலம் யாவர்க்கும்
சாயல் நினது வான்நிறை - என்னும்
நா வல் அந்தணர் அரு மறைப் பொருளே
அவ்வும் பிறவும் ஒத்தனை உவ்வம்
எவ் வயினோயும் நீயே (பரி 1- 52-59)

என்ற பாடல் காட்டுகின்றன. திருமாலின் மேனியின் இயல்பான ஒளி சிறப்புமிக்க கருநீலமணியின் ஒளியினை ஒத்ததாகும். கண்கள் எல்லாராலும் புகழப்படும் தாமரை மலர்கள் இரண்டனைப் பிணைத்து வைத்தமையை ஒத்தனவாகும். அவரது வாய்மையாகிய பண்பு தவறாமல் வருகின்ற விளக்கமுடைய நாளினை ஒத்ததாகும். இறைவனின் பொறுமைத் தன்மையினை ஆராய்ந்தால் அது நிலத்தினை ஒத்து விளங்கும். அருள்

கைம்மாறு கருதாமல் உதவும் மழைக்கு ஒப்பாகும். மேலும் இப்பொருள்களிலும் ஏனைப்பொருள்களிலும் உட்பொருளாய் உறைபவன். இக்கருத்துக்களிலிருந்து திருமால் அழகின் சிறப்பினைப் பல பண்புகளுடன் ஒப்புமைப் படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

காயாம் பூவின் நிறத்தினைக் கொண்ட இறைவனது திருவருளே வெண்கொற்றக் குடையாகவும், அக்குடைக்கு அறமே காம்பாகவும் கொண்டு துறக்கம், மண்ணுலகம், பாதலம் என்று மூன்று வகைப்பட்ட இருபத்தோர் உலகத்தையும் ஒரு குடை நிழலின் துணை கொண்டு காக்கும் காவலையுடையவன் என்பதை

பறவாப் பூவைப் பூவினோயே
அருள் குடையாக அறம் கோலாக
இரு நிழல் படாமை மூ -ஏழ் உலகமும்
ஒரு நிழல் ஆக்கிய ஏமத்தை மாதோ (பரி 2 73-76)

என்ற வரிகள் விளக்கக் காணலாம்.

## முடிவுரை

பரிபாடலில் திருமாலின் பெருமைகள், திருமாலை வழிபடுவோர் அடையும் பயன்கள், அவர் எடுத்த அவதாரங்கள்மற்றும் திருமால் வடிவங்களின் தன்மைகள் ஆகியவற்றை அறிய முடிகிறது.

XXX



ISBN 978-93-87882-47-8

டுடே பதிப்பகம்

192, பெல்ஸ்சாலை, சேப்பாக்கம்
சென்னை-5